# தினமணி – 01.09.2014

## ***சங்கர நேத்ராலயா அகாதெமி: மருத்துவமனை மேலாண்மை படிப்பு: விண்ணப்பங்கள் வரவேற்பு***

சென்னை நுங்கம்பாக்கம் சங்கர நேத்ராலயா அகாதெமியில் மருத்துவ மேலாண்மை சார்ந்த படிப்புகளுக்கான வகுப்புகள் அக்டோபர் 4-ஆம் தேதி தொடங்குகின்றன.

இதுதொடர்பாக சங்கர நேத்ராலயா அகாதெமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: சென்னை சங்கர நேத்ராலயாவின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் அங்கமான சங்கர நேத்ராலயா அகாதெமி, மேலாண்மை சான்றிதழ் படிப்புக்கான வகுப்புகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

அதையடுத்து வரும் அக்டோபர் 4-ஆம் தேதி தகவல் தொடர்பு பரிமாற்றம், சுகாதார சேவையில் மனித வள மேலாண்மை, மருத்துவமனைகளுக்கான தர அங்கீகார முறைகள், சுகாதார பாதுகாப்புச் சட்டங்கள், சுகாதாரத் துறையில் தகவல் தொடர்பு வசதிகள் உள்பட பல்வேறு வகுப்புகள் சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரி சாலையில் உள்ள சங்கர நேத்ராலயா மருத்துவமனை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இதில் மருத்துவமனைகள், மருத்துவம் சார்ந்த நிறுவனங்களில் நிர்வாகம், மேலாண்மைத் துறைகளில் பணியாற்றும் இளநிலை, மத்திய நிலை ஊழியர்களும் பயனடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு 12 வார இறுதி நாள்களில் (சனிக்கிழமை) பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறுகிறது. இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஏதாவது ஒரு பாடப்பிரிவில் இளங்கலை பட்டம் பெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்பதாரர்கள் , www.thesnacademy.ac.in என்ற இணையதள முகவரியில் தாங்கள் விரும்பும் படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து செப்டம்பர் 6-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

மருத்துவமனைகளில் தற்போது பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுவோருக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இது குறித்த மேலும் தகவல்களுக்கு சங்கர நேத்ரலயா அகாதெமி கல்வி அதிகாரி அ.மகாலிங்கத்தை **97104 85295** என்ற தொலைபேசி எண்ணிலும் mahali@snmail.org என்ற இணையதள முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

http://www.dinamani.com/edition_chennai/chennai/2014/09/01/சங்கர-நேத்ராலயா-அகாதெமி-மரு/article2408692.ece